**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 15 / 2022** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 1<br>Defense<br>Court |
| Name | சரவணன் |
| Father's Name | பழனிசாமி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2024. | |

<u>முதல் விசாரணை</u>

நான் கே.பி.குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன்.நான் தற்போது மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் வெல்டிங் வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இருவரும் எங்கள் ஊர்காரர்கள் தான். சாட்சி சந்தோஷ்குமார் எனது தம்பி. 27.09.2020 ம் தேதி ஞாயிற்று கிழமை இரவு 7.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த விஸ்வபாரதி, சங்கர், நடராஜ், சக்திவேல் மற்றும் எனது தம்பி சந்தோஷ்குமார் ஆகியோர் கே.பி.குளம் பேருந்து

நிறுத்தத்தில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தேசிங்குராஜாவின் மைத்துனர் மணிகண்டன் அங்கு வந்தார். அவர் எங்களை பார்த்து மொறைத்துக்கொண்டு இருந்தார். நாங்கள் அவரை கண்டு கொள்ளவில்லை. அச்சமயம் 1ம் எதிரி ராஜ்குமார் அங்கு வந்தார். அப்போது மணிகண்டன் மேற்படி ராஜ்குமாரிடம் நான் வெளியூர்காரன் அதனால் பேச மாட்டிக்கிறாங்க நீ உள்ளூர்காரதானா நீ போயி உம்ப கொடு என்று சொன்னார். அப்போது எனது தம்பி சந்தோஷ்குமார் 1ம் எதிரி ராஜ்குமாரிடம் அவன் தேவையில்லாமல் பேசுறான்டா அவனிடம் நீ சொல்லு என்று சொன்னதற்கு 1ம் எதிரி ராஜ்குமார் என்து தம்பியை பார்த்து நீ என்ன பெரிய ஆளு புண்டையா அவனிடம் பேசுனா நீ என்ன கொரஞ்சா போயிருவ என்று சொன்னார். அதனால் மணிகண்டன் ராஜ்குமார் மற்றும் எனது தம்பிக்கு தள்ளுமுள்ளானது. நான் அவர்களை விலக்கி எனது தம்பி சந்தோஷ்குமாரை வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் ஆஜர் எதிரிகளும் மணிகண்டன் என்வரும் TN 47 AP 7743 என்ற பதிவெண் கொண்ட பல்சர் வண்டியில் எனது வீட்டின் முன்பாக வந்து வண்டியை நிப்பாட்டி விட்டு ராஜ்குமார் எனது வீட்டின் முன்பாக நின்று ஏய் தேவிடியா மகன்களா நீ என்ன பெரிய ஆளு புண்டையா என்று கத்தினார். சத்தம் கேட்டு நானும் எனது தம்பியும் எனது தகப்பனார், எனது மனைவி, தாயார் மற்றும் அருகில் வசிக்கும் சதீஸ்குமார், மணியம்மாள் ஆகியோர் வெளியே வந்தபோது ராஜ்குமார் அரிவாளால் என்னை வெட்ட வந்தார் நான் ஒதுக்கி கொண்டேன். எனது தம்பி அதை தடுக்க வந்தபோது 2ம் எதிரி விமல்ராஜ் இவனை போட்டால் தான் இந்த ஊருக்குள்ள நாம யாருனு தெரியும் என்று சொன்னதும் ராஜ்குமார் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி எனது தம்பியின் இடது பக்க கழுத்தில் அரிவாளால் வெட்டி விட்டார். அதன் பின்னர் அவர் மூவரும் வண்டியை எடுத்துக்கொண்டு ஓடி விட்டார்கள். எனக்கு பதட்டத்தில் ஒன்றும் புரியவில்லை. பின்னர் யாரோ தகவல் கொடுத்ததன் பேரில் வந்த ஆம்புலன்சில் எனது தம்பியை ஏற்றி கரூரில் உள்ள அமராவதி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு மாயனூர் காவல் நிலைய

போலீசார் வந்தார்கள். எனது தம்பி சந்தோஷ்குமார் மயங்க நிலையில் இருந்தால் நான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பின்னர் எனது தம்பியை மேல் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.